**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் செய்யூர்</u>**

**<u>DVC. No.4/2025</u>**

**<u>PW-1</u>**

| | | |
|---|---|---|
| பெயர். திரு.பவித்ரா | க/பெ.திரு.சூர்யா | நாள் **05.05.2026** |

<u>ம.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>

நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது மனுவிலும், பிரமாண வாக்குமூலத்திலும் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும் என்றால் தெரியும். எனக்கும், எதிர்மனுதாரருக்கும் எந்த தேதியில், எந்த மாதத்தில் திருமணம் நடந்தது என்றால் 14.09.2020 முண்டகக்கன்னியம்மன் கோயிலில் திருமணம் நடந்தது. திருமண வரவேற்பு மைசூர் மஹாலில் நடந்தது. எனது பிரமாண வாக்குமூலத்தில் எனது திருமண தேதி மற்றும் திருமணம் நடைபெற்ற இடத்தை தவறாக குறிப்பிட்டுள்ளது என்றால் இல்லை. சரியான தேதி தான். (பிரமாண வாக்குமூலத்தில் திருமண தேதி பிரிண்ட் தவறு என்று கூறுகிறார்).

2. எனது திருமணத்தின் போது தாய் வீட்டு சீராக எத்தனை சவரன்கள் போட்டார்கள் என்றால் நெக்லஸ் 2-1/2 சவரன், ஆரம் 2-1/2 சவரன், கம்மல் 1 சவரன், தாலி உருவு 1 சவரன், மாட்டல் 1 சவரன் ஆகும். சீர்வரிசை நகைகள் வாங்கியதற்கு ஆதாரமாக நீதிமன்றத்தில் ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எதிர்மனுதாரருக்கு இருசக்கர வாகனம் வாங்குவதற்காக எவ்வளவு தொகை கொடுத்தேன் என்றால் 1 லட்சத்து 90 ஆயிரம் கொடுத்தேன். கையில் ரொக்க பணமாக கொடுத்தேனா அல்லது வங்கி மூலமாக பரிமாற்றம் செய்தேனா என்றால் சீர்வரிசையாக வண்டியாக தான் கொடுத்தோம்.

3. என்ன வண்டி, எந்த கம்பெனி என்று கேட்டால் TVS ரிண்டால் கம்பெனி என் பெயரில் வாங்கி கொடுத்தேன். வண்டியின் ஆர்.சி.புக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். குடும்ப உபயோக பொருட்கள் சீர்வரிசையாக என்ன என்ன கொண்டு வந்தேன் என்றால் டீவி, பிரிட்ஜ், வாஷிங்மெஷின், கட்டில், பீரோ, வீட்டு உபயோகப்பொருட்கள் மற்றும் எவர் சில்வர் பொருட்கள் ஆகும்.

4. குடும்ப உபயோகப்பொருட்கள் எவ்வளவு தொகை என்று கேட்டால் ரூபாய் இரண்டு லட்சத்து தொன்னூறு ஆயிரம் ஆகும். நான் சென்னையிலிருந்து எனது மாமியார் வீட்டில் பிரச்சனை என்று என் சொந்த ஊருக்கு எப்போது வந்தேன் என்று கேட்டால் ஞாபகம் இல்லை. கடந்த 12.03.2025 தேதியில் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எதிர்மனுதாரர் மீது ஒரு புகார் கொடுத்தபோது எனது அம்மா வீட்டில் இருந்தேன் என்றால் சரிதான். நான் கொடுத்த புகார் சம்பந்தமாக காவல் நிலையத்தில் என்னை விசாரணை செய்தபோது சேர்ந்து வாழ விருப்பம் இல்லை என்று கேட்டால் விருப்பம் இருப்பதாக சொன்னேன். புகார் மீது எந்த மேல்நடிவடிக்கையும் எடுக்கவில்லை, விசாரணை செய்தார்கள்.

4. நான் கொடுத்த புகார் மீது நியாயமான கோரிக்கை எதுவும் இல்லை என அந்த புகார் முடிக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். எனது மகன் எந்த தேதியில் பிறந்தார் என்றால் 27.05.2022 அன்று பிறந்தார். எனது மகனின் முதல் மற்றும் இரண்டாம் பிறந்தநாள் விழா என்னுடைய கணவர் வீட்டில் தான் நடந்தது என்றால் சரிதான். முதல் மற்றும் இரண்டாம் பிறந்தநாள் விழாவிற்கு என்னுடைய அப்பா, அம்மா யாரும் வரவில்லை என்றால் முதல்

பிறந்தநாளுக்கு வரவில்லை. முதல் மற்றும் இரண்டு பிறந்தநாள் விழா செலவுகள் அனைத்தும் எதிர்மனுதாரராகிய எனது கணவர் தான் செலவு செய்தார் என்றால் சரிதான்.

5. 3 வது எதிர்மனுதாரர் ஷோபனா என்பவர் வீட்டிற்கு எந்த தேதியில், எந்த மாதத்தில் போனேன் என்றால் ஞாபகம் இல்லை. கடந்த 28.5.2024 அன்று 3 வது எதிர்மனுதாரரின் அவரது கணவரிடம் குடும்பத்தை பற்றி தவறுதலாக பேசுவதற்கு அங்கு போனதாகவும், கொடுமைப்படுத்தியதாகவும் போனேன் என்று எனது பிரமாண வாக்குமூலத்தில் பொய்யாக சித்தரித்து சொல்லி இருந்தேன் என்றால் சரிதான். 1 முதல் 3 எதிர்மனுதாரர்களும் என்னை எந்த தேதியில் அடித்து கொடுமைப்படுத்தினார்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

6. எந்த ஊரில் 1 முதல் 3 எதிர்மனுதாரர்களும் என்னை கொடுமைப்படுத்தினார்கள் என்றால் சென்னை புளியாந்தோப்பு. என்னை அடித்து கொடுமைப்படுத்தியதற்கு நான் அருகில் உள்ள மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்துள்ளேன். அந்த புகாரின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். சென்னை புளியாந்தோப்பில் மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் கொடுக்கவில்லை.

7. எனது பிரமாண வாக்குமூலத்தில் 7 வது பத்தியில் என்றாலும் அது மாதிரி சம்பவம் நடந்திருக்கிறது என்று பொய்யான புகார் காவல் நிலையத்தில் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். எனது கணவர் எதிர்மனுதாரரின் தந்தை எதிர்மனுதாரர் குழந்தையாக இருக்கும்போதே

விட்டுவிட்டு சென்றுவிட்டார் என்றால் சரிதான். சொந்த ஊரான சின்ன வெண்மணி கிராமத்தில் முதல் எதிர்மனுதாரர் அவருடைய அப்பா சென்றுவிட்ட பிறகு அங்கே தங்கியிருந்தார் என்றால் தங்கியிருந்தார்.

8. 3 வது எதிர்மனுதாரர் முதல் எதிர்மனுதாரரை குழந்தையாக இருக்கும்போது வளர்த்தார் என்றால் சரிதான். 3 வது எதிர்மனுதாரர் முதல் எதிர்மனுதாரரை குழந்தையாக வளர்த்ததால் 3 வது எதிர்மனுதாரருக்கும், முதல் எதிர்மனுதாரருக்கும் தவறான தொடர்பு இருப்பதாக என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலும், மனுவிலும் சொல்லியுள்ளேன் என்றால் அது உண்மை தான். நான் 2022 ம் ஆண்டு செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் சிகிச்சை பெற்றேன் என்றால் இல்லை. எனக்கு மனநிலை பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறேன் என்றாலும் இதை எதிர்மனுதாரிடம் மறைத்து வருகிறேன் என்றாலும் சரியல்ல.

9. திருமணத்திற்கு பிறகு நானும், எனது கணவரும் தனி குடித்தனம் சென்னை புளியந்தோப்பில் வாடகைக்கு வீடு எடுத்திருந்தோம் என்றாலும் 2 வது எதிர்மனுதாரர் தனியாக வேறு ஒரு வாடகை வீட்டில் இருந்தார் என்றால் சரிதான். முதல் எதிர்மனுதாரர் தனக்கு திருமணம் நடைபெறுவதற்கு முன்பே தனிக்குடித்தனத்திற்காக வாடகை வீடு தயார் செய்திருந்தார் என்றால் சரிதான்.

10. 2 வது எதிர்மனுதாரர் செல்வி ஓட்டலில் வேலை செய்கிறார் என்றால் சரிதான். 2 வது எதிர்மனுதாரர் ஓட்டலில் சாப்பாடு மற்றும் அவருக்கு வரும் வருமானத்தை என்னிடம் கொண்டு வந்து கொடுப்பாரா என்றால் எதுவும்

கொடுக்கமாட்டார். 2 வது எதிர்மனுதாரர் அவருக்கு ஒரே மகன் என்பதால் என்னுடைய குடும்ப பயன்பாட்டிற்கு அவருடைய வருமானத்தை மொத்தமாக குடும்ப செலவிற்காகவும் செலவழித்தார் என்றால் செலவு செய்யவில்லை. நான் சென்னையில் இருக்கும்போது வேறு ஏதாவது வேலைக்கு சென்றேனா என்றால் செய்யவில்லை. அப்படி ஏதாவது முயற்சி செய்தேனா என்றால் இல்லை. வீட்டு வாடகை, மருத்துவ செலவு அனைத்தும் என்னுடைய கணவர் தான் பார்த்துக்கொண்டார் என்றால் சரிதான்.

11. திருமண அழைப்பிதழ் குறிப்பிட்டுள்ள திருமண தேதி சரியா அல்லது எனது மனுவிலும், பிரமாண வாக்குமூலத்திலும் உள்ள திருமண தேதி சரியாக என்று கேட்டால் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள திருமண தேதி தான் சரி. இந்த அழைப்பிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டி தயார் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த அழைப்பிதழை நானும், எனது குடும்பமும் சேர்ந்து தான் தயார் செய்தோம் என்றால் சரிதான். (சாட்சி யோசித்துவிட்டு சரியில்லை என்று மறுபடியும் கூறினார்).

12. எனது கணவருக்கும், எனக்கும் பிரச்சனை ஏற்பட்டு எனது அம்மா வீட்டிற்கு வந்துவிட்டேன் எந்த தேதியில் என்னை சமாதானம் செய்து அழைக்க வந்தார் என்றாலும் எனது பிரமாண வாக்குமூலத்திலும், மனுவிலும் குறிபிட்டுள்ளேனா என்றால் சரியல்ல, அழைக்க வரவில்லை.

எதிர்மனுதாரரின் வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in open read over to the witness and acknowledged by him/her to be correct.
**Sd/-Tmt.C.M.Amaravathi**
DM Cum JM
Cheyyur